**கூட்டல் கழித்தல் முறையில் வங்கி சரிகட்டும் பட்டியல் தயாரிக்கும் வழி முறைகள்**

1. பத்திகள் 3 எடுத்து கொள்க
2. முதல்பத்தி விவரம், இரண்டாவது பத்தி கூட்டுக(பற்று), மூன்றாவது பத்தி கழிக்க(வரவு) என எடுத்து கொள்க
3. கொடுக்கப்பட்டுள்ள கணக்கில் உள்ள இருப்பு பின்வருவன ஒன்றில் ஏதேனும் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கும் அதாவது
    - ரொக்க ஏட்டின் படி வங்கியிருப்பு/ பற்று இருப்பு/ சாதக இருப்பு
    - செல்லேடு அறிக்கையின் படி வங்கியிருப்பு/ வரவு இருப்பு/ சாதக இருப்பு
    - ரொக்க ஏட்டின் படி வங்கி மேல்வரைப்பற்று/ வரவுஇருப்பு/ பாதக இருப்பு
    - செல்லேடு அறிக்கையின் படி வங்கி மேல்வரைப்பற்று/ பற்று இருப்பு/ பாதக இருப்பு
4. **இருப்பினை கீழ்வரும் மாதிரியில் உள்ளவாறு பதிவு செய்க**

| விபரம் | கூட்டுக | கழிக்க |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி வங்கியிருப்பு/ பற்று இருப்பு/ சாதக இருப்பு | ****** | |
| ரொக்க ஏட்டின் படி வங்கி மேல்வரைப்பற்று/ வரவுஇருப்பு/ பாதக இருப்பு | | ****** |
| செல்லேடு அறிக்கையின் படி வங்கியிருப்பு/ வரவு இருப்பு/ சாதக இருப்பு | | ****** |
| செல்லேடு அறிக்கையின் படி வங்கி மேல்வரைப்பற்று/ பற்று இருப்பு/ பாதக இருப்பு | ****** | |

5. தற்போது கணக்கில் கொடுக்கப்பட்டுள்ள மற்ற இனங்களை பதிவு செய்வது குறித்த( எனது) பார்வை
6. ரொக்க ஏட்டில் வங்கி பத்தியில் சாதகமான இருப்பு என எடுத்துக்கொண்டு ஒரு நடவடிக்கையின் விளைவு வங்கி செல்லேடு அறிக்கையில் எப்படி இருக்கும் கணித்தல்

7. நடவடிக்கையின் விளைவு செல்லேடு அறிக்கையில் **கூடுதலாக** இருக்கும் எனக்கருதும் போது மேற்கண்ட மாதிரியில் உள்ள விவரம் பத்தியில் நடவடிக்கையின் தன்மையை எழுதிய பின் தொகையை **கூட்டுக** பத்தியாக கருதும் பத்தியில் எழுதுக
8. நடவடிக்கையின் விளைவு செல்லேடு அறிக்கையில் **குறைவாக** இருக்கும் எனக்கருதும் போது மேற்கண்ட மாதிரியில் உள்ள விவரம் பத்தியில் நடவடிக்கையின் தன்மையை எழுதிய பின் தொகையை **கழிக்க** பத்தியாக கருதும் பத்தியில் எழுதுக
9. பின்வரும் நடவடிக்கைகள் வங்கி அறிக்கையின் படி கூடுதலாக இருக்கும் அதாவது **ரொக்க ஏட்டில் குறைவாகவும், வங்கி அறிக்கையின் படி கூடுதலாகவும்** இருக்கும். விவரம் பத்தியில் நடவடிக்கையின் தன்மையை எழுதிய பின் தொகையை **கூட்டுக** பத்தியாக கருதும் பத்தியில் எழுதுக
   I. **ரொக்க ஏட்டில் பதிவு ஆனால் வங்கி அறிக்கையில் பதிவு ஏதும் இல்லை / செலவு இனங்கள் - ரொக்க ஏட்டின் வரவு இனங்கள்**
      அ. விடுத்த காசோலை ஆனால் வங்கியில் முன்னிலைப் படுத்தப்படவில்லை.
      ஆ. விடுத்த காசோலை வங்கியால் மறுக்கபட்டது
      மேற்கூறிய இரண்டு நடவடிக்கையில் ரொக்க ஏட்டில் இருப்பு தொகை குறைவாகவும், செல்லேடு அறிக்கையில் அதிகமாகவும் இருக்கும்
   II. **செல்லேடு அறிக்கையில் பதிவு ஆனால் ரொக்க ஏட்டில் பதிவு ஏதும் இல்லை / வருவாய் இனங்கள் - செல்லேட்டின் வரவு இனங்கள்**
      அ. நிலை அறிவுறுத்தலின் படி வங்கியால் வசூலித்த வாடகை/ வட்டி, பெற்ற பங்காதாயம் போன்றவை
      ஆ. வங்கியால் வரவு வைக்கப்பட்ட பிற இனங்கள்
      இ. வங்கியால் தவறுதலாக வரவு வைக்கப்பட்டவை
      ஈ. காசோலை பெற்றது, வங்கியில்செலுத்தப்பட்டது, ஆனால் ரொக்க ஏட்டில் பதிவு இல்லை
      உ. வாடிக்கையால் நமது கணக்கில்(வங்கி கணக்கில்) நேரடியாக செலுத்தியது
      - நிகழ்நேர தீர்வகம் மூலம் செலுத்தியது
      - தேசிய மின்னனு தீர்வகம் மூலம் செலுத்தியது

- பணம் வைப்பு இயந்திரம் மூலம் செலுத்தியது
- இணைய வங்கி மூலம் செலுத்தியது
- பற்று அட்டை/கடன் அட்டை மூலம் செலுத்தியது

III. ரொக்க ஏட்டில் கணக்காளர் செய்த தவறுகள் (**ரொக்க ஏட்டின் வரவு பக்கம்**)

அ. இணைய வங்கி வழியாக செலுத்தியது **இரு முறை** பதியப்பட்டது

ஆ. வட்டி, வங்கி கட்டணம் போன்றவை **வங்கியால் பற்று** செய்யப்பட்டுள்ளது ரொக்க ஏட்டில் **இருமுறை** பதியப்பட்டுள்ளது

இ. காசோலை விடுத்தது ரொக்க ஏட்டில் **இரு முறை** பதியப்பட்டது

ஈ. எடுத்தெழுதல் தவறுகள் (₹1200 மதிப்புள்ள காசோலை விடுத்து செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்பட்டது தவறுதலாக ரொக்க ஏட்டில் ₹ 2100 என வரவு வைக்கப்பட்டது ( 2100 - 1200 = 900) )

உ. ரொக்க ஏட்டில் தவறான வரவு ( **செலவு இனங்கள்**)

ஊ. ரொக்க ஏட்டின் **பற்றிருப்பு ₹4100 வரவிருப்பாக** எடுத்தெழுதப்பட்டது (**இரண்டு மடங்கு தொகை கூடுதல் பத்தியில் இடம் பெற வேண்டும்.** அதாவது ஒரு தொகை நீக்கம் செய்வதற்கும், மற்றொரு தொகை சரியாக இடம் பெறுவதற்கும்)

**IV. ரொக்க ஏட்டின் பற்று பக்கம்**

- ரொக்க ஏட்டின் வங்கி பத்தியின் **பற்று** பக்கத்தில் **குறைவான** தொகை / கூடுதல்
- வங்கியில் செலுத்திய காசோலை மதிப்பை ரொக்க ஏட்டில் குறைவாக பதிவு செய்வது

மேற்கண்ட நடவடிக்கைகள் தவிர மற்ற நடவடிக்கைகள் வங்கி அறிக்கையின் படி குறைவாக இருக்கும் அதாவது **ரொக்க ஏட்டில் அதிகமாகவும், வங்கி அறிக்கையின் படி குறைவாகவும்** இருக்கும். விவரம் பத்தியில் நடவடிக்கையின் தன்மையை எழுதிய பின் தொகையை **கழிக்க** பத்தியாக கருதும் பத்தியில் எழுதுக

**கணக்கில் இடம் பெறாதாவை**

1. **2017 டிசம்பர் 31 அன்று வியாபாரி ஒருவர் பெற்ற வங்கி அறிக்கை**
   - வங்கியால் மறுப்பு மற்றும் ரொக்க ஏட்டில் பதிவு இல்லை
   - சரிகட்டும் பட்டியல் தேதிக்கு முன் வங்கியால் வசூலிக்கப்பட்டவை / வரவு வைக்கப்பட்டவை

## வங்கி அறிக்கையின் படி மேல்வரை பற்று

1. சுதா **நிறுமத்தின் வங்கி அறிக்கையானது 2017 டிசம்பர்ம்பர், 31 அன்று `ரூ 10,000 மேல்வரைப்பற்றினை** காட்டியது. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயார் செய்க.
(அ) 2017 டிசம்பர், 30 அன்று வங்கியில் செலுத்திய காசோலை ரூ15,000 வங்கியால் வசூலித்து வரவு வைக்கப்படவில்லை.
(ஆ) 2017 டிசம்பர், 31 அன்று வங்கியால் பற்று வைக்கப்பட்ட நீண்டகால கடன் மீதான வட்டி ரூ 500. ஆனால் சுதா நிறுவனத்தின் ஏடுகளில் பதியப்பட்படவில்லை.
(இ) 2017 டிசம்பர், 24 அன்று ரூ 550-க்கான காசோலை விடுக்கப்பட்டு வங்கியரால் செலுத்தப்பட்ட ரூ 505 என ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தியில் பதியப்பட்டது.
(ஈ) 2017 டிசம்பர், 27 அன்று விடுத்த காசோலை ரூ 200 இரு முறை ரொக்க ஏட்டில் பதியப்பட்டது.
(உ) ரொக்க வைப்பு ரூ 2,598 வங்கியால் ரூ 2,589 எனப் பதியப்பட்டது.
(ஊ) பணம் வைப்பு இயந்திரம் வாயிலாக 2017 டிசம்பர்ம்பர், 31 அன்று வாடிக்கையாளரால் செலுத்தப்பட்ட ரூ 2,000 சுதா நிறுமத்தின் ஏடுகளில் பதியப்படவில்லை.
(எ) மேல்வரை மேல்வரை மேல்வரைப்பற்று மீதான வட்டி ` 600 சுதா நிறுவனத்தின் ஏடுகளில் பதியப்படவில்லை.
(ஏ) 2017 டிசம்பர், 29 அன்று விடுத்த இரு காசோலைகள் முறையே ரூ 500 மற்றும் ரூ 700 -இல் முதல் காசோலை மட்டுமே 2017 டிசம்பர், 31 -க்கு முன் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்பட்டது.

| | கூட்டுக ₹ | கழிக்க ₹ |
|---|---|---|
| வங்கி அறிக்கையின் படி மேல்வரைப்பற்று | **10000** | |
| 2017 டிசம்பர், 30 அன்று வங்கியில் செலுத்திய காசோலை ரூ15,000 வங்கியால் வசூலித்து வரவு வைக்கப்படவில்லை | | 15000 |
| 2017 டிசம்பர், 31 அன்று வங்கியால் பற்று வைக்கப்பட்ட நீண்டகால கடன் மீதான வட்டி ரூ 500. ஆனால் சுதா நிறுவனத்தின் ஏடுகளில் பதியப்பட்படவில்லை. | | 500 |

| | | |
|---|---|---|
| 2017 டிசம்பர், 24 அன்று ரூ 550-க்கான காசோலை விடுக்கப்பட்டு வங்கியரால் செலுத்தப்பட்ட ரூ 505 என ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தியில் பதியப்பட்டது.(550- 505) | | 45 |
| 2017 டிசம்பர், 27 அன்று **விடுத்த காசோலை** ரூ 200 **இரு முறை** ரொக்க ஏட்டில் பதியப்பட்டது | 200 | |
| ரொக்க வைப்பு ரூ 2,598 வங்கியால் ரூ 2,589 எனப் பதியப்பட்டது.(2589-2598= -9 | | 9 |
| பணம் வைப்பு இயந்திரம் வாயிலாக 2017 டிசம்பர்ம்பர், 31 அன்று **வாடிக்கையாளரால் செலுத்தப்பட்ட** ரூ 2,000 சுதா **நிறுமத்தின் ஏடுகளில் பதியப்படவில்லை**. | 2000 | |
| மேல்வரை மேல்வரை மேல்வரைப்பற்று மீதான வட்டி ` 600 சுதா நிறுவனத்தின் ஏடுகளில் பதியப்படவில்லை. | | 600 |
| 2017 டிசம்பர், 29அன்று **விடுத்த இரு காசோலைகள்** முறையே ரூ 500 மற்றும் **ரூ 700 -**இல் முதல் காசோலை மட்டுமே 2017 டிசம்பர், 31 -க்கு முன் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்பட்டது | 700 | |
| | 12900 | 16154 |
| **ரொக்க ஏட்டின் படி வங்கியிருப்பு( சாதக இருப்பு)** | **3254** | |
| | 16154 | 16154 |

2. பின்வரும் தகவல்களிலிருந்து 2016 டிசம்பர் 31-ம் நாளன்றைய ரொக்க ஏட்டின் இருப்பை கண்டறிக.

   (அ) வங்கி அறிக்கையின் படியான மேல்வரைப்பற்று இருப்பு ரூ 1,26,640

   (ஆ) வங்கி அறிக்கையில் பதியப்பெற்ற மேல்வரைப்பற்று மீதான வட்டி, ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை ரூ3,200

   (இ) வங்கி அறிக்கையில் பதியப்பெற்ற வங்கிக் கட்டணம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை ரூ 600

   (ஈ) விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது ரூ 23,360

   (உ) வங்கியில் செலுத்திய காச�ோலை இன்னும் வசூலித்து வரவு வைக்கப்படாதது ` ரூ 43,400

   (ஊ) வங்கியால் வசூலிக்கப்பட்ட முதலீடு மீதான வட்டி ரூ 24,000

| | கூட்டுக ₹ | கழிக்க ₹ |
|---|---|---|
| வங்கி அறிக்கையின் படியான மேல்வரைப்பற்று இருப்பு ரூ 1,26,640 | **126640** | |
| வங்கி அறிக்கையில் பதியப்பெற்ற மேல்வரைப்பற்று மீதான வட்டி, ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை ரூ3,200 | | 3200 |
| வங்கி அறிக்கையில் பதியப்பெற்ற வங்கிக் கட்டணம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை ரூ 600 | | 600 |
| **விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது** ரூ 23,360 | 23360 | |
| வங்கியில் செலுத்திய காச�ோலை இன்னும் வசூலித்து வரவு வைக்கப்படாதது ` ரூ 43,400 | | 43400 |
| **வங்கியால் வசூலிக்கப்பட்ட முதலீடு மீதான வட்டி** ரூ 24,000 | 24000 | |
| | 174000 | 47200 |
| ரொக்க ஏட்டின் படி மேல்வரை பற்று | | **126800** |
| | 174000 | 174000 |

## ரொக்க ஏட்டின் படி மேல்வரைப்பற்று

1. பின்வரும் விவரங்களைக் கொண்டு 2017 டிசம்பர் 31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிக்கட்டும் பட்டியலைத் தயார் செய்து, வங்கி அறிக்கையின் படியான இருப்பினைக் கண்டுபிடிக்கவும்

| | விவரம் | ரூ |
|---|---|---|
| i) | ரொக்க ஏட்டின் படி மேல்வரைப்பற்று | 20,000 |
| ii) | செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | 4,000 |

| | விவரம் | ரூ |
|---|---|---|
| iii) | விடுத்த காசோலை செலுத்து ைகக்கு முன்னிலைப்படுத்தப்படாதது | 1,000 |
| iv) | நிலை அறிவுறுத்தலின்படி வங்கி வசூலித்த வாடகை | 500 |
| v | வங்கியால் பற்று செய்யசெய்யப்பட்ட மேல்வரைப்பற்று மீதான வட்டி | 2,000 |
| vi) | வங்கியால் தவறுதலாலாக பற்று வைக்கப்பட்ட தொகை | 300 |
| vii) | 2017 டிசம்பர் 30 அன்று விடுத்த காசோலை வங்கியால் மறுக்கப்பட்டது | 5,000 |
| viii) | வங்கியில் செலுத்திய வாடிக்கையாளரின் காசோலை வங்கியால் மறுக்கப்பட்டது. ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | 2,000 |

**தீர்வு**

| | கூட்டுக ₹ | கழிக்க ₹ |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி மேல்வரைப்பற்று | | **20000** |
| செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | | 4000 |
| **விடுத்த காசோலை செலுத்து ைகக்கு முன்னிலைப்படுத்தப்படாதது** | 1,000 | |
| **நிலை அறிவுறுத்தலின்படி வங்கி வசூலித்த வாடகை** | 500 | |
| வங்கியால் பற்று செய்யசெய்யப்பட்ட மேல்வரைப்பற்று மீதான வட்டி | | 2,000 |
| வங்கியால் தவறுதலாலாக பற்று வைக்கப்பட்ட தொகை | | 300 |
| **2017 டிசம்பர் 30 அன்று விடுத்த காசோலை வங்கியால் மறுக்கப்பட்டது** | 5,000 | |
| வங்கியில் செலுத்திய வாடிக்கையாளரின் காசோலை வங்கியால் மறுக்கப்பட்டது. ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | | 2,000 |
| | 6500 | 28300 |

| | | |
|---|---|---|
| வங்கி அறிக்கையின் படி மேல்வரைப்பற்று | **21800** | |
| | 28300 | 28300 |

**வங்கி அறிக்கையின் படி வங்கி இருப்பு/ வரவு இருப்பு**

3. பின்வரும் விவரங்களைக் க�ொண்டு 2017 டிசம்பர் 31-ஆம் நாளன்றைய ரொக்க ஏட்டின் இருப்பினைக் கணக்கிடவும்.

(i) வங்கி அறிக்கையின் படி வரவு இருப்பு ரூ 2,500

(ii) வங்கிக் கட்டணம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை ரூ 60

(iii) 2017 டிசம்பர் 28 அன்று வங்கியில் செலுத்திய காசோலை இன்னும் வசூலித்து வரவு வைக்கப்படவில்லை ரூ 1,000

(iv) 2017 டிசம்பர் 24 அன்று விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை ரூ 700

(v) வங்கியால் நேரடியாக வசூலிக்கப்பட்ட பங்காதாயம் ரொக்க ஏட்டில் பதிவு செய்யப்படவில்லை ரூ 400

(vi) காசோலை மறுக்கப்பட்பட்டது குறித்து ரொக்க ஏட்டில் எந்த பதிவும் செய்யப்படவில்லை ரூ 600

(vii) வங்கியால் பற்று செய்யப்பட்ட நீண்டகால கடன் மீதான வட்டி ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை ரூ 1,200

(viii) 2014 டிசம்பர் 23 அன்று வங்கியர் அறிவுறுத்தல்படி வணிகச் சந்தா செலுத்தியது குறித்து ரொக்க ஏட்டில் பதிவு செய்யப்படவில்லை ரூ 500

| | **கூட்டுக ₹** | **கழிக்க ₹** |
|---|---|---|
| வங்கி அறிக்கையின் படி வரவு இருப்பு ரூ 2,500 | | **2500** |
| வங்கிக் கட்டணம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை ரூ 60 | | 60 |
| 2017 டிசம்பர் 28 அன்று வங்கியில் செலுத்திய காசோலை இன்னும் வசூலித்து வரவு வைக்கப்படவில்லை ரூ 1,000 | | 1000 |
| 2017 டிசம்பர் 24 அன்று விடுத்த காசோலைஇன்னும் | 700 | |

| | | |
|---|---|---|
| செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை ரூ 700 | | |
| வங்கியால் நேரடியாக வசூலிக்கப்பட்ட பங்காதாயம் ரொக்க ஏட்டில் பதிவு செய்யப்படவில்லை ரூ 400 | 400 | |
| காசோலை மறுக்கப்பட்பட்டது குறித்து ரொக்க ஏட்டில் எந்த பதிவும் செய்யப்படவில்லை ரூ 600 | | 600 |
| வங்கியால் பற்று செய்யப்பட்ட நீண்டகால கடன் மீதான வட்டி ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை ரூ 1,200 | | 1200 |
| 2014 டிசம்பர் 23 அன்று வங்கியர் அறிவுறுத்தல்படி வணிகச் சந்தா செலுத்தியது குறித்து ரொக்க ஏட்டில் பதிவு செய்யப்படவில்லை ரூ 500 | | **500** |
| | 1100 | 5860 |
| ரொக்க ஏட்டின் படி வங்கியிருப்பு | **4760** | |
| | 5860 | 5860 |

**ரொக்க ஏட்டின் படி வங்கி இருப்பு அல்லது பற்று இருப்பு**

1. செந்தாமரை நிறுவனத்தின் 2018 மார்ச், 31-ஆம் நாளன்றைய ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியானது ரூ 40,200 பற்றிருப்பைக் காட்டியது. ரொக்க ஏட்டையும், வங்கி அறிக்கையையும் ஆய்வு செய்தபோது கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:
(அ) 2018 மார்ச், 29 அன்று வங்கியில் ரூ 2,240 க்குச் செலுத்திய காசோலை 2018 ஏப்ரல் 4 அன்றுதான் வங்கியால் வரவு வைக்கப்பட்டது.
(ஆ) இணைய வங்கி வாயிலாக செலுத்திய ரூ 180 ரொக்க ஏட்டில் இரண்டு முறை பதியப்பட்டது.
(இ) ரூ 1,000 மதிப்புள்ள மாற்றுச்சீட்டை, செந்தாமரை நிறுவனம் அதன் வங்கியில் தள்ளுபடி செய்தது. 2018 மார்ச் 30 அன்று அந்த மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது. ஆனால், இதற்கான பதிவுகள் ஏதும் செந்தாமரை நிறுவன ஏடுகளில் செய்யப்படவில்லை.

(ஈ) ரூ 500 மதிப்புள்ள காசோலை நிறுவனம் செலுத்தவேண்டிய கடனுக்காக விடுக்கப்பட்டு ரொக்க ஏட்டில் 2018 மார்ச், 31-க்கு முன்னர் பதியப்பெற்றது. ஆனால், அந்நாள்வரை வங்கியில் செலுத்துகைக்கு முன்னிலைப் படுத்தப்படவில்லை

(உ) 2018 மார்ச், 30 அன்று ரூ 2,000 மதிப்புள்ள காசோலை ரொக்க ஏட்டில் வங்கியில் செலுத்தப்பட்டதாக பதிவு செய்யப்பட்டது. ஆனால், வங்கி அறிக்கையில் 2018 ஏப்ரல், 3 அன்று பதியப்பெற்றது.

(ஊ) வங்கி நேரடியாக தமிழக அரசிடமிருந்து போக்குகுவரத்து மானியம் ரூ 3,000 பெற்றது. ஆனால் இது குறித்து செந்தாமரை நிறுவனத்திற்கு தெரிவிக்கப்படவில்லை.

(எ) ` 1,500 தவறுதலாக செந்தாமரை நிறுவனக் கணக்கில் வங்கியால் பற்று வைக்கப்பட்டது. இது குறித்த விவரங்கள் ஏதுமில்லை.

(ஏ) 2018 மார்ச், 31 ரொக்க ஏட்டின் செலுத்தல்கள் பகுதி ரூ 1,200 குறைவாக கூட்டப்பட்டுள்ளது

| | கூட்டுக ₹ | கழிக்க ₹ |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி பற்றிருப்பு | **40,200** | |
| 2018 மார்ச், 29 அன்று வங்கியில் ரூ 2,240 க்குச் செலுத்திய காசோலை 2018 ஏப்ரல் 4 அன்றுதான் வங்கியால் வரவு வைக்கப்பட்டது | | 2240 |
| இணைய வங்கி வாயிலாக **செலுத்திய** ரூ 180 ரொக்க ஏட்டில் **இரண்டு முறை** பதியப்பட்டது | 180 | |
| ரூ 1,000 மதிப்புள்ள மாற்றுச்சீட்டை, செந்தாமரை நிறுவனம் அதன் வங்கியில் தள்ளுபடி செய்தது. 2018 மார்ச் 30 அன்று அந்த மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது. ஆனால், இதற்கான பதிவுகள் ஏதும் செந்தாமரை நிறுவன ஏடுகளில் செய்யப்படவில்லை. | | 1000 |
| ரூ 500 மதிப்புள்ள **காசோலை** நிறுவனம் செலுத்தவேண்டிய கடனுக்காக **விடுக்கப்பட்டு** ரொக்க ஏட்டில் 2018 மார்ச், 31-க்கு முன்னர் பதியப்பெற்றது. ஆனால், அந்நாள்வரை வங்கியில் செலுத்துகைக்கு **முன்னிலைப்படுத்தப்படவில்லை** | 500 | |

| | | |
|---|---|---|
| 2018 மார்ச், 30 அன்று ரூ 2,000 மதிப்புள்ள காசோலை ரொக்க ஏட்டில் வங்கியில் செலுத்தப்பட்டதாக பதிவு செய்யப்பட்டது. ஆனால், வங்கி அறிக்கையில் 2018 ஏப்ரல், 3 அன்று பதியப்பெற்றது. | | 2000 |
| **வங்கி நேரடியாக** தமிழக அரசிடமிருந்து போக்குகுவரத்து மானியம் ரூ 3,000 பெற்றது. ஆனால் இது குறித்து செந்தாமரை நிறுவனத்திற்கு தெரிவிக்கப்படவில்லை. | 3000 | |
| ` 1,500 தவறுதலாக செந்தாமரை நிறுவனக் கணக்கில் வங்கியால் பற்று வைக்கப்பட்டது. இது குறித்த விவரங்கள் ஏதுமில்லை. | | 1500 |
| 2018 மார்ச், 31 ரொக்க ஏட்டின் செலுத்தல்கள் பகுதி ரூ 1,200 குறைவாக கூட்டப்பட்டுள்ளது | | 1200 |
| | 43380 | 6940 |
| **செல்லேடு அறிக்கையின் படி இருப்பு** | | **36440** |
| | 43380 | 43380 |

2. பின்வரும் தகவல்களிலிருந்து 2017 டிசம்பர் 31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயாரித்து வங்கி அறிக்கையின் படியான இருப்பினைக் கணக்கிடவும்.

| | விவரம் | ரூ |
|---|---|---|
| 1 | ரொக்க ஏட்டின் படி இருப்பு | 15,000 |
| 2 | செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | 1,000 |
| 3 | 2017 டிசம்பர் 31-க்கு முன்னர் விடுத்த காசோலை ரொக்க ஏட்டில் பதியப்பெற்று அந்நாள் வரை செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில் | 1,500 |
| 4 | வங்கியால் நேரடியாகப் பெற்ற பங்காதாயம் | 200 |
| 5 | வங்கியால் நேரடியாகச் செலுத்தப்பெற்ற வாடகை | 1,000 |

| | விவரம் | ரூ |
|---|---|---|
| 6 | வங்கி வசூலித்த பாதுகாப்பு பெட்டக வாடகை ரொக்க ஏட்டில் பதியப்படவில் | 1,200 |
| 7 | 2017 டிசம்பர் 30 அன்று வங்கியால் செய்யசெய்யப்பட்ட தவறுதலான பற்று | 500 |
| 8 | இணைய வங்கி வாயிலாக செலுத்தியது ரொக்க ஏட்டில் இரு முறை பதிவு செய்யப்பட்டது | 300 |

| | கூட்டுக ₹ | கழிக்க ₹ |
|---|---|---|
| **ரொக்க ஏட்டின் படி இருப்பு** | **15,000** | |
| செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | | 1,000 |
| 2017 டிசம்பர் 31-க்கு முன்னர் **விடுத்த காசோலை** ரொக்க ஏட்டில் பதியப்பெற்று அந்நாள் வரை செலுத்துகைக்கு முன்னிலைப் படுத்தப்படவில்லை | 1500 | |
| **வங்கியால் நேரடியாகப் பெற்ற பங்காதாயம்** | 200 | |
| வங்கியால் நேரடியாகச் செலுத்தப்பெற்ற வாடகை | | 1000 |
| வங்கி வசூலித்த பாதுகாப்பு பெட்டக வாடகை ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை | | 1200 |
| 2017 டிசம்பர் 30 அன்று வங்கியால் செய்யசெய்யப்பட்ட தவறுதலான பற்று | | 500 |
| இணைய வங்கி வாயிலாக **செலுத்தியது ரொக்க ஏட்டில் இரு முறை பதிவு** செய்யப்பட்டது | 300 | |
| | 17000 | 3700 |
| **வங்கி அறிக்கையின் படி வங்கியிருப்பு** | | **13300** |
| | **17000** | **17000** |